Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 25 (11-10-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 236

## மறியல் செய்த பத்திரிகையாளரை ஜீப்பால் மோத முயற்சி

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பத்திரிகையாளரை ஜீப் மூலம் மோதித்தள்ள முற்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று காலிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. பத்திரிகையாளர் தாக்கப்படும் சம்பவங்களை ஆட்சேபித்து வெகுஜனத் தொடர்புத்துறையைச் சேர்ந்தவர்கள் அண்மையில் காலி பஸ் நிலையத்தில் மறியற் போராட்டமொன்றை நடாத்தினர். மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் குழுமிநின்ற இடத்திற்கு ஜீப்பை செலுத்திவந்த ஒரு பொலிஸ் அதிகாரி அவர்களை ஜீப்மூலம் மோதித்தள்ள முற்பட்டார். அப்போது ஜீப்பைச் சூழ்ந்து (4ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ அதிகார அமைப்பில் திடீர் மாற்றம்

# புலிகளின் தொடர் தாக்குதலின் எதிரொலி

## போதுமான மருந்துவகைகள் கப்பலில் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்கு வேண்டிய ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் நேற்றுப் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த ''குமாரி'' என்ற கப்பலில் எடுத்துவரப்பட்டிருக்கிறது.

சுமார் 6·78 மெற்றிக்தொன் மருந்துப் பொருள்கள் இவ்வாறு எடுத்துவரப் பட்டிருக்கிறது. எனினும் இம்மருந்துப் பொருள்களின் அளவு குடா நாட்டின் மருந்துப் பொருள்களுக்கான தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை என்று கூறப்படுகிறது.

## குமாரி கப்பல் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

''குமாரி''என்ற கப்பல்நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது குடாநாட்டுக்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் தபால் பொதிகளையும் இக்கப்பல் ஏற்றிவந்தது.

எனினும், இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. இன்று அல்லது நாளை முதல் பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வெளியூர் தபால்கள் செவ்வாய் முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்ட வெளியூர் தபால்கள் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கப்பட இருக்கிறது. பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 547 வெளியூர் தபால் பொதிகளை யாழ் பிரதம தபால் அலுவலகத்திற்கு எடுத்து வருவதற்காக தபால் அலுவலக அதிகாரி ஒருவரும் ஊழியர்களும் நாளை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்குச் செல்ல உள்ளனர்.

நாளை மாலை யாழ் தபால் அலுவலகத்திற்கு எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படும் இத்தபால் பொதிகள் இரவோடிரவாக தரம் பிரிக்கப்பட்டு நாளை மறுதினம் முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக தபால் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

[க]

## மன்னாருக்கு அனுப்பிவைப்பு

(வவுனியா)

தமிழ்நாட்டிலிருந்து திருக்கோணமலைக்கு வந்துசேர்ந்துள்ள மன்னார் பகுதியைச் சேர்ந்த அகதிகள் புத்தளம் ஊடாக மன்னார்த் தீவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை தலைமைப்பீடத்திடம் மீண்டும் அதிகாரம் கையளிப்பு

[கொழும்பு]


வடக்கு – கிழக்கு இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொறுப்பு மீண்டும் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்களினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பெருமளவினதான உயிர்ச்சேதமும், இராணுவ தளபாட இழப்புமே முப்படைத் தளபதிகளிடம் இருந்த அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கை தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் ஒப்படைக்கக் காரணம் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளிடம் அளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் இராணுவ அமைப்பின் கட்டுப்படுத்தும், கட்டளையிடும் அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் இருந்து, முப்படைகளின் தளபதிகளிடமும் பொலிஸ்மா அதிபரினதும்கைக்கு மாறியது அத்தோடு, வடக்கு-கிழக்குப் போரைமுப்படைகளின் தளபதிகளேதிட்டமிடும்,வழிநடத்தும் அதிகாரங்களைப் பெற்றனர்.

தற்போழுது, மீண்டும் அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் மாற்றப்பட்டுள்ளன. கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் மூன்றாம் தடவையாக இப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. இந்தியா-சிறிலங்கா சமாதான உடன்படிக்கைக்கு முன்னர் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகமே வடக்கு - கிழக்கு போருக்கு பொறுப்பாக இருந்தது 1987 ஒப்பந்தத்தின் பின்னர்,கூட்டுப்படைநடவடிக்கை தலைமையகம் என்னும் அமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



## வட பகுதி யுத்த முனையில் ராணுவத்திற்கு பெரும் பின்னடைவு

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நிகழ்ந்த இராணுவ அதிகாரிகள் ஒன்பதுபேரின் மரணத்தைத் தொடர்ந்து வடபகுதி

இதைத் தொடர்ந்து படையினரின் நிலைமை மிக மோசமாகியுள்ளது. அன்று புலிகள் கைப்பற்றிச் சென்ற ஆயுதங்களின் மதிப்பு

இம் மாற்றங்களினால் படையினரின் மனோதிடம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 8-ம் திகதி முதல் இவ்

## வவுனியாவிலும், திருமலையிலும்

## குமாரி கப்பல் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பல்நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது குடா நாட்டுக்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் தபால் பொதிகளையும் இக் கப்பல் ஏற்றிவந்தது.

எனினும், இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. இன்று அல்லது நாளை முதல் பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(யாழ்ப்பாணம்)

''குமாரி'' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்ட வெளியூர் தபால்கள் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கப்பட இருக்கிறது. பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 547 வெளியூர் தபால் பொதிகளை யாழ் பிரதம தபால் அலுவலகத்திற்கு எடுத்து வருவதற்காக தபால் அலுவலக அதிகாரி ஒருவரும் ஊழியர்களும் நாளை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்குச் செல்ல உள்ளனர்.

நாளை மாலை யாழ் தபால் அலுவலகத்திற்கு எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படும் இத்தபால் பொதிகள் இரவோடிரவாக தரம் பிரிக்கப்பட்டு நாளை மறுதினம் முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக தபால் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார். [க]

## மன்னாருக்கு அனுப்பிவைப்பு

(வவுனியா)

தமிழ்நாட்டிலிருந்து திருக்கோணமலைக்கு வந்துசேர்ந்துள்ள மன்னார் பகுதியைச் சேர்ந்த அகதிகள் புத்தளம் ஊடாக மன்னார்த் தீவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெரியவருகின்றது.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதிசிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளிடம் அளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் இராணுவ அமைப்பின் கட்டுப்படுத்தும், கட்டளையிடும் அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் இருந்து, முப்படைகளின் தளபதிகளிடமும் பொலிஸ்மா அதிபரினதும்கைக்கு மாறியது அத்தோடு. வடக்கு-கிழக்குப் போரைமுப்படைகளின் தளபதிகளேதிட்டமிடும், வழிநடத்தும் அதிகாரங்களைப் பெற்றனர்.

தற்போழுது, மீண்டும் அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் மாற்றப்பட்டுள்ளன. கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகத்திடம் மூன்றாம் தடவையாக இப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. இந்தியா-சிறிலங்கா சமாதான உடன்படிக்கைக்கு முன்னர் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகமே வடக்கு - கிழக்கு போருக்கு பொறுப்பாக இருந்தது 1987 ஒப்பந்தத்தின் பின்னர், கூட்டுப்படைநடவடிக்கை தலைமையகம் என்னும் அமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை தினகரன்

மணலாறில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெடி விபத்தில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்

வீரவேங்கை தினகரன் (சிந்தாமணி அம்பிகைபாலன் கோணாவில் கிளிநொச்சி) என்பவரே இவ் வெடி விபத்தில் வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடபகுதி யுத்த முனையில் ராணுவத்திற்கு பெரும் பின்னடைவு

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நிகழ்ந்த இராணுவ அதிகாரிகள் ஒன்பதுபேரின் மரணத்தைத் தொடர்ந்து வடபகுதி யுத்தமுனையில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அக்டோபர் முதலாம் திகதியன்று கட்டைக்காடு இராணுவமுகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

இதைத் தொடர்ந்து படையினரின் நிலைமை மிக மோசமாகியுள்ளது. அன்று புலிகள் கைப்பற்றிச் சென்ற ஆயுதங்களின் மதிப்பு ஏறத்தாழ 5 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

யுத்த முனையில் நிகழ்ந்த இம் மாற்றங்களினால் படையினரின் மனோதிடம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 8-ம் திகதி முதல் இவ்வாரம் வரை 870 படையினர் படையை விட்டு தப்பியோடி விட்டனர்.

அதேசமயம் போரை நடத்தும் இராணுவ அதிகாரிகள் மத்தியில் கூட ஒற்றுமையைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும், திருமலையிலும்

# முகாம்களில் இடநெருக்கடி; அகதிகள் வருகை தாமதம்?

(வவுனியா)

வவுனியாவில் அகதிகளை தங்கவைப்பதில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்படும் அகதிகளை வவுனியாவிற்கு அனுப்பிவைக்க வேண்டாம் என அங்குள்ள அதிகாரிகள் திருக்கோணமலைக்கு அறிவித்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி தமிழகத்தில் இருந்து கப்பலில் திருமலை வந்துசேர்ந்த இரண்டாயிரம் பேரை அங்குள்ள இட நெருக்கடி காரணமாக வவுனியாவிற்கு அனுப்பிவைக்க திருமலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயினும் வவுனியா அதிகாரிகள் கேட்டுக் கொண்டதைஅடுத்து இவர்கள் திருமலையிலேயே தங்கியுள்ளனர்.

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் பலர்ஏற்கனவே வவுனியாவந்து அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்பினாலும் அப்பகுதியில் பாதுகாப்பு இல்லைஎன்ற காரணம் காட்டி அங்கு செல்ல இராணுவம் அனுமதி மறுத்துவருகிறது.

திருக்கோணமலை அகதி முகாம்களிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் வருகை தாமதமடையலாம் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பாடசாலைகளில்

## இடநெருக்கடியைத் தவிர்க்க தற்காலிக கொட்டகைகள்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வியைத் தொடருமுகமாக யாழ். செயலகத்தினால் மேலதிக தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

சுமார் 18 லட்சத்து 16 ஆயிரத்திநானூறு ரூபாய் செலவில் 37 கொட்டகைகள், வேலணை, பண்டத்தரிப்பு, மருதனார்மடம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய கல்விப்பணிப்பாளர் பிரிவுகள் தோறும் அமைக்கப்படுகின்றன.

இவற்றில் வேலணைப்பகுதிக்கு 5 கொட்டகைகளும், பண்டத்தரிப்புப் பகுதிக்கு 16 கொட்டகைகளும், மருதனார் மடப்பகுதிக்கு 3 கொட்டகைகளும், பருத்தித்துறைப்பகுதிக்கு 11 கொட்டகைகளும், யாழ்ப்பாணப் பகுதிக்கு 2 கொட்டகைகளும் அமைக்கப்பட்டுவருகின்றன (பா)

## 'சார்க்' மாதர் உச்சி மாநாடு; கொழும்பில் நடைபெறும்

(கொழும்பு)

சார்க் நாடுகளில் உள்ள மாதர்களின் உச்சி மாநாடு ஒன்று வரும் ஏப்ரல் மாத மளவில் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் பங்களா தேசிற்கு சிறிலங்கா ஜனாதிபதியுடன் விஜயம் செய்த அவரது பாரியார் ஹேமாபிரேமதாசா இது தொடர்பாக பங்களா தேஷ் பிரதமருடன் நீண்ட நேரம் உரையாடியதாகவும் தெரியவருகின்றது. இவ் உரையாடலில் தென்னாசியப்பெண்களின் இன்றைய நிலையும், அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள ஏனைய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அகதிகளை அனுப்புவதை இந்தியா இடைநிறுத்தியது

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் வேலையை இந்தியா மீண்டும் இடைநிறுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் தங்கியிருப்போரில் எஞ்சியுள்ளோரை எப்போது மீண்டும் இந்தியா திருப்பி அனுப்பத் தொடங்கும் என்று கூறமுடியாது எனினும் அடுத்த ஆண்டு ஜனவரிக்கு முன்பாக அகதிகள் அனுப்பப்படமாட்டார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆசிரியர் சம்பளத்திட்டம் செயற்பாட்டை ஆராய குழு

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்களது சம்பளத்திட்டம் மற்றும் பதவி உயர்வுகள் ஆகியவற்றைச் செயற்படுத்துவது குறித்து ஆராய்வதற்கென விசேட குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இக்குழுவில் திட்ட அமுலாக்கல் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, கல்வி அமைச்சு, திறைசேரி ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கியிருப்பர்.

## அதிகார மாற்றத்தின் பின் 640 படையினர் பலி

முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் வடக்கு - கிழக்கு போர் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவிருந்த காலப்பகுதியில் 640 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு 1000 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர். இதில் அராலித்துறையில் கொல்லப்பட்ட வடபகுதிக்கான இராணுவத்தளபதி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவஉட்பட ஒன்பது அதிகாரிகளும் அடங்குவர்.

மார்ச் 26 ஆம் திகதி இந்த அதிகார மாற்றம் வர்த்தகமானி மூலம் அறிவிக்கப்பட்டதாயினும், முப்படைத் தளபதிகள் அதிகாரங்களைப் பொறுப்பேற்ற ஏப்ரல் 15ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 8 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதியிலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெருமளவு ஆயுத தளபாடங்களையும் இராணுவம் இழந்துள்ளது. இதில் ஒரு தொகுதி புலிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா காவலரண்மீது அருள் 89 தாக்குதல்

### ஒரு சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா கணேசபுரம் இராணுவ காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார். நேற்று காலை 7.30 மணியளவில் இத்தாக்குல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதி காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் அருள் 89 தாக்குதலை நடாத்திய போதே அச்சிப்பாய் கொல்லப்பட்டார்.

## அயல் நாட்டு கப்பற்படையுடன் இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சி

(கல்கத்தா)

இந்தியக் கடற்படை அயல் நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்து அந்தமான் - நிக்கோபார் பகுதிகளில் கூட்டுக் கடற்படைப் பயிற்சியொன்றை மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டுக்கடற்படைப்பயிற்சியில் இலங்கை, பங்களாதேஷ், மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இந்தியாவுடன் இணைந்து ஈடுபடும் என இந்திய கடற்படைதுணை தளபதி வைஸ்அட்மிரல் கோபி கல்கத்தாவில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

**வாய்க்கால் நீர் தனையும் வாய்ப்பாக்கி தேக்கிடுவீர்**

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு
**HIGH LINE PRIMA, BHIRA**

கைலைன் வெள்ளை, சறுட்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3325)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582 Stanley Road Jaffna. (சி 5169)

### பரீட்சை ஆண்டு 4, 5

ஆண்டு 6 அனுமதி மாதிரித் தேர்வும், ஆண்டு 5 (புலமைப் பரிசில் 1993) மாதிரிப் பரீட்சையும் 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். வினாத்தாள்களையும், பயிற்சி நூலையும் பெற்றுக் கொள்ளலாம் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3337)

### பிரதேச செயலகம் இடம் மாறியுள்ளது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் செயலகம் மீண்டும் முன்பு இயங்கிய மருதங்கேணிக்கு இடம் மாறியுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 'ஆகாயக் கடல் வெளி' இராணுவ நடவடிக்கை காரணமாக, இச் செயலகம் அம்பன் கமநல சேவை நிலையத்திற்கு

## மருத்துவதுறை மீது வாசுதேவா கண்டனம்

நோயாளிகளுக்காக வைத்தியர்கள் என்ற நிலைமாறி வைத்தியர்களுக்காகவே நோயாளிகள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே இன்றைய மருத்துவத் துறையின் தாரக மந்திரமாகவும் உள்ளது.

இவ்வாறு ஐக்கிய சோசலிச முன்னணி எம். பி. வாசுதேவ நாணயக்கார கடந்த புதன் கிழமை பாராளுமன்றில் சுகாதார மகளிர் விவகார அமைச்சுக்கான குறைநிரப்பு பிரேரணைமீது பேசும்போது தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவிக்கையில் டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான சகல கட்டுப்பாடுகளும் அரசினால் தளர்த்தப்பட்டுள்ளது இதனால் நோயாளிகளே பாதிப்படைகின்றனர். டாக்டர்களுக்கு உதவுவதே அரசின் நோக்கமாக இருக்கிறது நோயாளிகளைப் பற்றி அக்கறையில்லை.

சுகாதாரத் துறைக்கு இந்த அரசு போதுமான நிதியை ஒதுக்குவதாக இல்லை. இதனால் அப்பாவி மக்கள்தான் பலியாகிறார்கள். சுகாதார சேவைக்குப் போதுமான நிதியை ஒதுக்காததன் மூலமாக இவ் அரசாங்கம் மக்களைப் பலியிடும் அரசாங்கமாகவே இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

### கணிதம் / விஞ்ஞானம்
## ஆசிரியர் தேவை

முல்லை மாவட்டத்தில் சாதாரண (O/L) உயர்தர (A/L) வகுப்பு மாணவர்களுக்கு கணித/விஞ்ஞான பாடங்கள் கற்பிக்க ஆசிரியர்கள் தேவை இருப்பிடம், உணவுவசதி, செய்து கொடுக்கப்படும்.

விரும்பிய தகுதியுள்ளோர் 15.10 92க்கு முன் விண்ணப்பிக்கவும் வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நடுவகப்பணியகம்
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
(3340)

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!

## சைவநெறி வினா - விடை
[ஆண்டு 10 - 11]

- ★ 505 வினாக்களுக்கு விரிவான விடைகள்
- ★ சைவநெறியின் சிறப்பினை விளக்கும் குறிப்புகள்
- ★ பரீட்சையில் உச்சப்புள்ளிபெற வழிகாட்டும் அரியநூல்

**ஆக்கம்:** இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம்
(B.A [Hons] Dip. in. Ed)
எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும்
பதிப்பாளர்:
**ஸ்ரீ காந்தா புத்தகசாலை**
380, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(3343)

## பிறந்தநாள் நினைவலைகள்

### உதவிப்பணம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான பணம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்படி உதவிப்பணம் பெறுவோர் அவரவர் பகுதி கிராம சேவையாளர் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என வேலணை உதவி அரச அதிபர் பிரிவுப் பணிமனை அறிவித்துள்ளது. (பா)

### அடையாள அட்டைகள் இரத்து செய்யப்படும்


நான்கு இலட்சம் பேரின் தேசிய அடையாள அட்டைகள் செல்லுபடியாகாமல் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது 1972 - 1973 களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளே ரத்துச் செய்யப்படவுள்ளன.

### தொழிலாளர் கல்விச்சான்றிதழ் நெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் 21-ம் 22-ம், 28-ம், 29-ம் திகதிகளில் நடைபெறும். மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தகுந்த கட்டணப் பற்றுச் சீட்டுடன் 23-10-92க்கு முன்பாக சமர்ப்பிக்கவும்.

பதிவாளர்.
(சி- 5202)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் அப்துல்லா**
(கணபதிப்பிள்ளை நகுலகுமார்)

## நன்றி நவிலல்

சந்நிதியான் தேர் அன்று (10-9-92) எமது ஒளிவிளக்காய்த் திகழ்ந்த இராசையா நவரெத்தினம் (ஆசிரியர், மானிப்பாய் மெமொறியல் ஆங்கிலப் பாடசாலை) எம்மை விட்டுப் பிரிந்த துயரச்செய்தி கேட்டு உடன் எமக்கு ஆதரவாக இருந்த மானிப்பாய் மெமொறியல் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவுநாள் நிகழ்ச்சியிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்குபற்றி எமக்கு சகல விதத்திலும் உதவி புரிந்த கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்றங்கள், நண்பர்கள், உற்றார், உறவினர், அயலவர்கள் ஆகிய யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி N. இந்திராணி

சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (சி/5205)

பிள்ளைகள்
N. நரேந்திரன்
N. இந்துஷா

யாழ்ப்பாண பல்கலைக்கழக
## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

- ★ கலைமுதற்தேர்வு (G. A.Q.)
- ★ வணிகமுதற்தேர்வு [FIRST in Com.]

பொதுக் கலைத்தேர்வு
(B. A PART I)

- ★ வணிகமாணித் தேர்வு (B. Com. PART I)

ஆகிய கற்கைநெறிகள் தொடர்பான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல்
**S. வரதராஜன்** (B. A. Hons)

ஆரம்பம் : **18 - 10 - 92 ஞாயிறு**
**G. A. Q; Ist in Com.** ஞாயிறு 4.15 P.M.
**B. A. PART I; B. Com. PART I** - ஞாயிறு 10.00 A.M.

**பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5203)

## நினைவு கூருகின்றோம்...

சையும் 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். வினாத்தாள்களையும், பயிற்சி நூலையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3337)

## பிரதேச செயலகம் இடம் மாறியுள்ளது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் செயலகம் மீண்டும் முன்பு இயங்கிய மருதங்கேணிக்கு இடம் மாறியுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 'ஆகாயக் கடல் வெளி' இராணுவ நடவடிக்கை காரணமாக, இச் செயலகம் அம்பன் கமநல சேவை நிலையத்திற்கு இடமாற்றப் பட்டிருந்தது.

பொதுஸ்தாபனங்களின் வேண்டுகோளை யடுத்து, மீண்டும் மருதங்கேணிக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (36)

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பங்கீட்டு அட்டையொன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ரூபா 38 வீதம் இம்மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் ஒரு நபருக்கு ஓர் அட்டைக்கு மட்டும் விநியோகம் செய்யப்படுமெனவும் சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் விநியோகம் நடைபெறுமெனவும் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் வேலணை ப. நோ. கூ சங்கமும் பாவனையாளருக்கு மண்ணெய் விநியோகம் செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது. (88)


## சைவநெறி வினா - விடை

[ஆண்டு 10 - 11]

★ 505 வினாக்களுக்கு விரிவான விடைகள்
★ சைவநெறியின் சிறப்பினை விளக்கும் குறிப்புகள்
★ பரீட்சையில் உச்சப்புள்ளிபெற வழிகாட்டும் அரியநூல்

ஆக்கம்: இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம்
(B.A [Hons] Dip. in. Ed)

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

பதிப்பாளர்:

**ஸ்ரீ காந்தா புத்தகசாலை**

3δ0, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

(3343)


## பிறந்தநாள் நினைவலைகள்



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 11 | 30 |
| 10 | 06 |
| 1974 | 1992 |

### 2 ஆம் லெப். கூத்தரசன் (குபேரன்)

[பாலசுப்பிரமணியப் கிரிதரன்]
(காளிகோயிலடி சங்கானை)

குருவாக வீரப்புலியாக
களமாடி மடிந்தவா - கூத்தரசா
சிங்களம் வெல்வோம்
தமிழ் ஈழம் சமைப்போம்

உன் நண்பர்கள்
சதா, சஞ்சீவ்

(3347)



### மேஜர் அப்துல்லா

(கணபதிப்பிள்ளை நகுலகுமார்)

வீரப்பிறப்பு 20-07-1963
வீரச்சாவு 5-10-1987

விடுதலையை வேண்டினீர்!
விரைவுடன் செயற்பட்டீர்!!
வேங்கைகள் அணியில் மேஜராய் உயர்ந்தீர்!!!
கொடுத்தீர் உம் உயிரை
தொழுகின்றோம்... தொடர்கின்றோம்
உங்கள் காலடிச் சுவடுகளை

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (சி/5201) -குடும்பத்தினர்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 16 | 28 |
| 06 | 08 |
| 1977 | 1992 |

### லெப். தொல்காப்பியன்

(சுப்பிரமணியம் வசந்தரூபன்) [ரூபா]

ஈழத் தமிழ் மண்ணில் இதயம் பறிகொடுத்த
வேழத் தமிழ் மகனே லெப்டினன்ட் தொல்காப்பியனே
வெற்றிலைக்கேணி சின்ன மண்டலாயில் வெறி
- கொண்ட வேங்கையே
வெற்றித் திருமகனே விண்ணுலகு சென்றனையோ
எதிரிகளின் பாசறையைச் சிதறச் செய்தாய்
உறவினரின் உள்ளங்களை குமுறச் செய்தாய்
தமிழீழ மண்ணிலே தலையைச் சாய்த்து
அழியாத பெரும் புகழை அடைந்தாய் நீயே

இவரதும் இவருடன் வீரச்சாவடைந்தவர்களதும் ஆத்மாசாந்தி அடைய நல்லூர்கந்தனைப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

''வசந்தகிரி''
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(3336)


ஆரம்பம் : 18 - 10 - 92 ஞாயிறு

G. A. Q; Ist in Com. ஞாயிறு 4.15 P.M.
B. A. PART I; B. Com. PART I — ஞாயிறு 10.00 A.M.

**பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5203)


## நினைவு கூருகின்றோம்... 1992-10-11

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - பாவற்கொடிச்சேனையில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**மாணிக்கம்**

1987ஆம் ஆண்டு தெல்லிப்பழைப் பகுதியில், இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**விஸ்ணு** (சுப்பையா விஸ்ணுமோகன் - மட்டுவில், சாவகச்சேரி-யாழ் )

மூளாயில் பொன்னாலை முகாம் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப்.குணம்** (சேபஸ்தியாம்பிள்ளை ரவிச்சந்திரன் - விடத்தல்தீவு, மன்னார்,

இந்தியப்படையினரின் எறிகணை வீச்சில் பலியான நாட்டுப்பற்றாளரான-
(யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியர்)

**ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை**

மூளாய் காளி கோயிலடி, கோப்பாய் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு பாண்டிருப்புப் பகுதியில், இந்தியப்படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**அன்பு** (இராசநாயகம் ஜெயரத்தினம் - பாண்டிருப்பு)

திருக்கோணமலையில், இந்தியப்படையினரால் பாதுகாப்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் வவுனியா - அனுராதபுரம் பேருந்திலிருந்து சிறிலங்காப்படையினரால் இறக்கப்பட்டு காட்டிற்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழ்ப்பயணிகள்.

1989ஆம் ஆண்டு மண்டான் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப் விஜயன்/பொடியன்** (நடனசிகாமணி வில்வராஜ் - தெணியம்பை, வல்வெட்டித்துறை-யாழ் )

1990ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுதாகர்**
**கெஞ்சன்**

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5206)


## யாழ் நகரில்......

குறைந்த விலையில் மக்களுக்கு நிறைந்த சேவை!

★ மூக்குப் பொடி ★ நூற்கயிறுகள்
★ ஊதுபத்திகள் ★ வாசனைத்
★ சாய்ப்புச்சாமான்கள் திரவியங்கள்

அனைத்துக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

**சிவசம்பு களஞ்சியம்**

03, மின்சார நிலைய வீதி - யாழ்ப்பாணம் (சி-5207)

## சிந்தனைக்கு

நாகரிக மேல்பூச்சுப் பூசிய சூது காட்டுமிராண்டிகளின் நோய்.

- வில்லியம் இஞ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சாத்தான் ஓதும் வேதம்

“மனிதாபிமான காரணங்களுக்காகவும், பொதுமக்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காகவும், பாதுகாப்புப்படையினர் ஆனையிறவுப் பாதையை போக்குவரத்திற்காக திறந்துவிட முடிவு செய்துள்ளார்கள்'' இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு இருதினங்களுக்கு முன்னர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது மேலும் அவ்வறிக்கையில், பொதுமக்களின் வசதிக்காகவும், மனிதாபிமான அடிப்படையிலும் யாழ் போதனா வைத்தியசாலையை இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை படையினர் மேற்கொண்டனர் எனவும், விடுதலைப்புலிகளுக்கு இவ்வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்பது தெரிந்திருந்தும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், ஆனையிறவுப் பாதையை மனிதாபிமான அடிப்படையில் திறந்துவிட பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறிவித்த அதே தினத்தில், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் எனக்கூடப் பார்க்காமல் ஏழு அப்பாவிப் பொதுமக்களை கிளாலிக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படை சுட்டுக்கொன்றது. இது நெரியாமல் நடந்ததொன்றல்ல. இது ‘எங்களைச்சுடாதீர்கள்’ என பெண்களும், சிறுவர்களும் கையைத் தூக்கியவாறு அலறியபோது, கடற்படைப்படகிலிருந்து பாய்ச்சப்பட்ட ஒளிவெள்ளத்தில் நடந்த கோரச் சம்பவம். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் சிறிலங்கா கடற்படைக்கோ, அன்றி இராணுவத்திற்கோ புதுமையானதொன்றல்ல. குமுதினிப்படகில் ஒன்றரை வயதுக்குழந்தையை ‘பைனட்’ கத்தியினால் குத்திக் கொன்றவர்கள் சிறிலங்கா கடற்படையினர். இவர்கள் அந்தளவிற்கு ‘மனிதாபிமானம்’ கொண்டவர்கள்.

மேலும், கிழக்கில் இவர்கள் மேற்கொண்ட/ மேற்கொண்டுவரும் படுகொலைகளும், சித்திர

# சிங்கள இளைஞர்களும், நாட்டின் வளமும் அரசின் அணுகுமுறையால் அழிந்துபோகின்றன

## ‘ஐலன்ட்’ நாளிதழின் ஆதங்கம்

‘சைரன்களை’ முழக்கியபடி காயமடைந்த படையினரைக் காவிச் செல்லும் அம்புலன்ஸ் வாகனங்கள் காலிவீதி வழியே ஓடித்திரிவது இப்போது வழமையான ஒன்றாகிவிட்டது அதனால் அம்புலன்ஸ் வாகனத்தின் ‘சைரன் ஒலி’ எழுப்பும் அவலக்குரல் வேதனையளிப்பதாகவோ இடையூறு செய்வதாகவோ இப்போது பெரும்பாலும் இருப்பதில்லை. அதிகரித்து வரும் சூழல் மாசடைதல் பற்றி எவரும் அலட்டிக்கொள்ளாதது போலவே அம்புலன்ஸ் வாகனங்களின் சைரன் இரைச்சல் பற்றியும் எவரும் கவனத்திற்கு எடுப்பதில்லை கொழும்பின் தெருவோரங்களில் நாளாந்தம் சேரும் குப்பைகள் பற்றி அதிகாரிகள் மட்டத்தில் அலட்சியம் செய்யப்படுவதைப் போல இந்த அம்புலன்ஸ் வாகனங்கள் எழுப்பும் இரைச்சலும் அலட்சியம் செய்யப்படுகிறது.

வழமைபோலவே பொதுமக்களில் பலரும் இந்தக் குழப்பகரமான நிலையைப் போக்குவது அரசாங்கத்தின் கடமை என்றே கருதுகின்றனர். ஆனால் அரசாங்கமோ இதுவரையில் நடமாடும் ஜனாதிபதி செயலக அமர்வுகளை நடத்துவதிலும் அடுத்த கம் உதாவ கொண்டாட்டங்கள் பற்றித் திட்டமிடுவதிலும் தான் கவனம் செலுத்துகின்றதேயன்றி நாட்டை எதிர்நோக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தல் பற்றி கவலைப்படாமல் கண்களை இறுக மூடிக்கொண்டுள்ளது

சண்டையை தொடர்ந்து நடத்துவதானால் அதை விரைவிலேயே முடிவுக்கு கொண்டு வருவதில் அரசுக்கு ஆர்வம் இருக்கிறது என்பது காட்டப்பட வேண்டும் ஆனால் நாம் காண்பது என்ன? காயமடைந்து வரும் படையினரை ரத்மலானவிலிருந்து கொழும்புக்கு கூட்டி வருவதற்கு ஹெலிகப்டர்கள்பயன்படுத்துவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை பரிசீலனை செய்யப்படுவதற்கு கூட அவசரம் காட்டப்படவில்லை முடிவுகளை மேற்கொள்வதில் அதிசயமான ஒரு தேக்கம் காணப்படுகிறது அல்லது போனால் போர்க்களத்திற்கு அண்மித்த பகுதிகளில் நவீன வசதிகளையுடைய வைத்தியசாலைகளாவது அமைக்கப்பட வேண்டும். அதைவிடுத்து பிரபாகரன் எப்போது தன் குற்றங்களை உணர்ந்து மனம் திருந்துவார் என்றும் எப்போது ஆயுதங்களைக் கைவிட ஆயத்தமாகுவார் என்றும் அறிவதிலேயே அரசுக்கு நாட்டம் அதிகம் உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனத்தைச் சுத்தப்படுத்தும் கைங்கரியங்கள் கடினமான உணர்வலைகளை எழுப்பும் இத்தருணத்தில் அரசின் அணுகுமுறை ஆத்திரத்தை ஏற்படுத்துவதாகும். பல்லாண்டு காலமாக வாழ்ந்துவந்த நிலப்பரப்பிலிருந்து முஸ்லிம்களும் சிங்களவர்களும் விரட்டப்பட்டு வருவதுடன் அப்பாவிகள் படுகொலைக்கும் இலக்காகின்றனர். மனித உரிமைகளை பிரஸ்தாபிக்கும் எவரும் இவ் விடயத்தில் அடையாள பூர்வ எதிர்ப்பைத்தானும் காட்டுவதாக இல்லை. அண்மைக் காலங்களில் இத்தகைய படுகொலைகள் அதிகரித்து வருகிறது இருந்தும் இந்நாட்டின் பராக்கிரமத்தைப் பாவித்து இத்தகைய மூர்க்கத்தனமான போக்கு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும், அதற்காகப் பாதுகாப்பாளர்களுக்கு உதவ வேண்டும் என்றும், அதிகாரத்தில் இருப்பவர்கள்கூட குரலெழுப்ப இன்னும் முன்வரவில்லை இன்னும் சுருக்கமாகச் சொன்னால் ‘‘அதிசக்திவாய்ந்த கடற்படைப் படகைப் புலிகள் பறித்து எடுத்துவிட்டனர்'' என்பன போன்ற செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரும்போது வழமைக்கு மாறான அமைதியே நிலவுகின்றது. தற்போதைய அரசாங்கம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் எத்தகைய விழிப்புணர்வுடன் இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணமாகாதா!

> ‘ஐலன்ட்’ நாளிதழ் கடந்த ஏழாம் திகதியன்று எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தின் மொழியாக்கத்தை இங்கேதருகிறோம் ‘இனத்துப்புரவாக்கல்’ என்ற தலைப்புடன் இது வெளியிடப்பட்டிருந்தது.

இன்னும் இராணுவத்திலிருந்து தப்பியோடுபவர்கள்பற்றி வெளிவரும் செய்திகள் ஊக்கம் தருவதாக இல்லை. ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் சேருவதற்காக நீண்ட வரிசைகளில் இளைஞர்கள் காத்துக் கிடந்ததை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆர்வத்துடன் படையில் இணைந்து கொண்ட இளைஞர்களின் ஆற்றல் குன்றிவிட்டதா? அல்லது போரிடும் விருப்பத்தை அவர்கள் இழந்துவிட்டனரா? அல்லது இறுதிப்போர் ஒன்றை நடத்த முன்வரும்படி அவர்களுக்கு யாரும் அழைப்பு விடவில்லையா? அரசாங்கத்தினர் கடைப்பிடிக்கும் தயக்கத்துடனான அணுகுமுறையின்பெறுபேறாக நாட்டின் பெருமளவு வளம்வீணடிக்கப்படுவதுடன், அதன் இளைஞர்களின் எதிர்காலமும் கணக்கின்றி அழிந்து போகின்றது.

அதிகாரத்தில் இருப்பவர்கள் இனியாவது சுறுசுறுப்புடன் செயலாற்ற வேண்டும். பலவீனம் தமது முழந்தாள்களில் தான் இருக்கிறது என்று ஆட்சியாளர் இனிமேலாவது புரிந்து கொள்ள வேண்டும். தீர்மானகரமான வார்த்தைகளை இனிமேலாயினும் அவர்கள் கூறவேண்டும். விமலதர்மசூரிய போன்ற சரித்திரகாலத் தலைவர்கள் ‘‘போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று கூறி மக்களுக்கு அழைப்பு விடுத்தது போல.

## தொழிலாளர் லயன்கள் அசௌகரியமாகவுள்ளன

- வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

மலையகத்தில் தொழிலாளர் வசிக்கும் லயன்கள் மனிதர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு அருவருக்கத்தக்க நிலையிலும் காணப்படுகிறது. இது தற்போதைய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தோடு எவ்வகையிலும் ஒத்துப்போக முடியாததாகும் என்று பாராளுமன்றத்தில் பேசிய நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் மலையகத் தமிழர்களின் அவல வாழ்வு பற்றிய படங்கள் வெளிநாடுகளில் காண்பிக்கப்படுகின்றது. தமிழர்கள் வாழ்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டும் ஒரு குறியீடாகவே இவை காண்பிக்கப்படுகின்றன மிகச் சிறிய லயன் அறைகளில் கைகள் கால்களை நீட்டி நிமிர்ந்து படுப்பதே சிரமமானது. ஆனால் இத்தகைய சிறிய அறைகளிலேயே அவர்களின் முழுக்குடும்பமும் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் முன் பக்கத்தில் ஒரு சிறிய தாவாரத்தைப் போட்டு நீட்டினால் சட்ட விதிக்கு புறம்பானதெனக்கூறி அவர்கள் வேலையை விட்டே நீக்கப்பட்டு விடுகின்றனர் இது மனித நாகரிகத்திற்கே இழுக்

## தென்னாபிரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்ட இனஒதுக்கல் கொள்கை தவறு கிளார்க் மன்னிப்புக் கோரினார்

(ஜொகனஸ்பேர்க்)

இதுகால வரையில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த இன ஒதுக்கல் கொள்கை தவறானது என்று கூறியிருக்கும் தென்னாபிரிக்க அதிபர் எப். டபிள்யு. டீ. கிளார்க் அதற்காக வருத்தம் தெரிவித்துள்ளதுடன் மன்னிப்பும் கோரியுள்ளார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வெள்ளையினத் தலைவர் ஒருவர் இவ்வாறு வருத்தம் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். வின்பேர்க்கின் மத்திய நகரில் நேற்று முன்தினமிரவு பொதுக் கூட்டமொன்றில் பேசிய அதிபர் டீ. கிளார்க் மேலும் கூறுகையில், தனித் தேசிய இன நாடுகளுக்கான கோரிக்கையில் வெற்றி காண்பது முடியாது என்பது தெரிந்திருந்தும் ஆளுங்கட்சி நீண்ட காலமாக இப்போக்கை கடைப்பிடித்து வந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இதற்காக வருத்தமும் தெரிவித்த டீ. கிளார்க் 1989-ல் பதவியேற்ற போது சட்டபூர்வமான இன ஒதுக்கலுக்காக மன்னிப்புக்கோர மறுத்திருந்தது தெரிந்ததே. ஆர்ச் பிஷப் டெஸ்மண் டூட்டு உட்பட வெள்ளையரல்லாத பலரும் தென்னாபிரிக்க அதிபர் இத்தகைய மன்னிப்பைக் கோரவேண்டும் என்று வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

மான அடிப்படையில் திறந்துவிட பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறிவித்த அதே தினத்தில், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் எனக்கூடப் பார்க்காமல் ஏழு அப்பாவிப் பொது மக்களை கிளாலிக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படை சுட்டுக்கொன்றது. இது நெரியாமல் நடந்ததொன்றல்ல. இது 'எங்களைச்சுடாதீர்கள்' என பெண்களும், சிறுவர்களும் கையைத் தூக்கியவாறு அலறியபோது, கடற்படைப்படகிலிருந்து பாய்ச்சப்பட்ட ஒளி வெள்ளத்தில் நடந்த கோரச் சம்பவம். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் சிறிலங்கா கடற்படைக்கோ, அன்றி இராணுவத்திற்கோ புதுமையானதொன்றல்ல. குமுதினிப்படகில் ஒன்றரை வயதுக்குழந்தையை 'பைனட்' கத்தியினால் குத்திக் கொன்றவர்கள் சிறிலங்கா கடற்படையினர். இவர்கள் அந்தளவிற்கு 'மனிதாபிமானம்' கொண்டவர்கள்.

மேலும், கிழக்கில் இவர்கள் மேற்கொண்ட/மேற்கொண்டுவரும் படுகொலைகளும், சித்திரவதைகளும் உலகப்பிரசித்தி பெற்றவை அத்தோடு நெருக்கமான குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளும் கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சும், கடற்படைப் பீரங்கித்தாக்கும், டாங்கி, 'ஆட்லறி' பீரங்கித்தாக்குதலும் சிறிலங்கா ஆயுதப்படையினரைப் பொறுத்து சாதாரண விடயங்கள் ஆகும். இதன்மூலம், இன்று உலகிலேயே படுகொலை புரிவதில் முதன்மையான நாடு என சிறிலங்கா 'பெருமை" தேடிக் கொண்டும் உள்ளது.

ஆனையிறவு பாதை திறப்பதென்பது யாழ். குடாநாடு மீதான தாக்குதலுடனும், ஆனையிறவு வெற்றிலைக்கேணிக்கும் இடையில் உள்ள இராணுவவேலி என்பனவற்றுடனும் தொடர்புடையது. அதாவது 'இராணுவவேலி' தந்திரோபாய தோல்வி கண்ட நிலையில் அதில் இருந்து வெற்றிகரமாக பின்வாங்க இராணுவத் தரப்பு திட்டமிடுகின்றது. அதேவேளை இப் பகுதியில் முடங்கிப்போயுள்ள ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை வேறு தாக்குதலுக்கு பயன்படுத்த இராணுவத் தலைமை திட்டமிட்டும் வருகின்றது. இப் பகுதியிலிருந்து இராணுவத்தை மீளப் பெற வேண்டும் என இராணுவத்திற்குள் ஒரு பகுதியினர் வற்புறுத்தியும் வருகின்றனர். இந் நிலையில் தான் தனது தோல்வியையும் தேவையையும் கருத்திற்கொண்டு சிறிலங்கா 'மனிதாபிமானம்' பேசுகின்றது.

இதேபோன்றே, போதனா வைத்தியசாலை விடயமும். இலங்கைக்குள் மனித உரிமைகள் ஸ்தாபனங்களுக்கும், மனிதநேய ஸ்தாபனங்களுக்கும் வர அரசாங்கம் அளித்துள்ள அனுமதிகளானது தனது தேவையுடனும் நிர்ப்பந்தத்தினாலும் ஏற்பட்டதே ஒழிய தமிழர்பால் கொண்ட மனிதநேயத்தினால் அல்ல. வெளிநாட்டுக் கடனின் அவசியம் உள்நாட்டு நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள சுமைகளை முழுமையாகச் சுமக்க முடியாத நிலையே அரசாங்கம் இவ்வமைப்புக்கள் உள்ளேவர அனுமதி அளித்தமைக்குக் காரணமாகும்.

இந்த நிலையில் மனிதாபிமான அடிப்படையில் ஆனையிறவுப் பாதையைத்திறந்து விடுவதென்பதும், யாழ் போதனா வைத்தியசாலையை இயங்க அனுமதித்திருப்பதென்பதுமான சிறிலங்காவின் கூற்று சாத்தான்வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும்.

---

## அசௌகரியமாகவுள்ளன

**- வாசுதேவநாணயக்கார**

(கொழும்பு)

மலையகத்தில் தொழிலாளர் வசிக்கும் லயன்கள் மனிதர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு அருவருக்கத்தக்க நிலையிலும் காணப்படுகிறது. இது தற்போதைய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தோடு எவ்வகையிலும் ஒத்துப்போக முடியாததாகும் என்று பாராளுமன்றத்தில் பேசிய நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் மலையகத் தமிழர்களின் அவல வாழ்வு பற்றிய படங்கள் வெளிநாடுகளில் காண்பிக்கப்படுகின்றது தமிழர்கள் இத்தீவில் எத்தகைய கடின வாழ்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டும் ஒரு குறியீடாகவே இவை காண்பிக்கப்படுகின்றன மிகச் சிறிய லயன் அறைகளில் கைகள் கால்களை நீட்டி நிமிர்ந்து படுப்பதே சிரமமானது. ஆனால் இத்தகைய சிறிய அறைகளிலேயே அவர்களின் முழுக்குடும்பமும் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் முன் பக்கத்தில் ஒரு சிறிய தாவாரத்தைப் போட்டு நீட்டினால் சட்ட விதிக்கு புறம்பானதெனக்கூறி அவர்கள் வேலையை விட்டே நீக்கப்பட்டு விடுகின்றனர் இது மனித நாகரிகத்திற்கே இழுக்கானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வரவு செலவுதிட்டயோசனை நவம்பர் 6 இல் வெளிவரும்

கடந்த செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையான 6600 கோடி ரூபாவினையும் எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து நவம்பர் மாதம் ஆறாம் திகதி சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்க பாராளுமன்றில் அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தொகையை சமாளிப்பதற்கு புதிய வரிகளை விதிப்பதா அல்லது வெளிநாட்டுக் கடன் எவ்வளவு கிடைக்கும் அல்லது செலவை எப்படி குறைப்பது ஆகிய விடயங்கள் அடங்கிய உத்தேச வரவு செலவுத் திட்ட யோசனைகளை அவர் அன்று வெளியிடுவார்.

இந்த உத்தேச யோசனைகளின்படி அரச ஊழியர்களின் சம்பளத்திலும் மாற்றம் செய்யப்படலாம் எனவும் அதிகார வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

சிறிலங்கா பிரதமரின் பட்ஜெட் உரை 45 நிமிடங்களைக் கொண்டதாக இருக்குமெனத் தெரிகிறது இவ்வுரை மீதான விவாதம் நவம்பர் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களின் நலன்கருதியும் தற்போது இடம் பெயர்ந்த நிலையில் உள்ள தீவகத்தைச் சேர்ந்த நிறுவனங்களின் இன்றைய செயற்பாடுகள் பற்றியும் முக்கியமான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10-00 மணியளவில் இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது.

இக்கூட்டத்தில் தீவகத்தைச் சேர்ந்த அரச உத்தியோகஸ்தர்கள், பல நோ. கூ. சங்கத் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், கமநல சேவை உத்தியோகஸ்தர்கள், உறுப்பினர்கள். சனசமூக, கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள், கடற் தொழிலாளர் சங்கத்தினர், முகாம் தலைவர்கள் ஏனைய தீவகத்தைச் சேர்ந்த சங்கங்கள், கழகங்கள், நிறுவனங்களின் சகல பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சோ. தங்கன், தீவக உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (பா)

## அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முப்பத்தொன்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை ஒன்பது மணியளவில் சங்கத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சென்ற வருட அறிக்கை, வரவு - செலவு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட இருப்பதால் உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## இனஒதுக்கல் கொள்கை தவறு கிளார்க் மன்னிப்புக் கோரினார்

(ஜொகனஸ்பேர்க்)

இதுகால வரையில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த இன ஒதுக்கல் கொள்கை தவறானது என்று கூறியிருக்கும் தென்னாபிரிக்க அதிபர் எப். டபிள்யு. டீ. கிளார்க் அதற்காக வருத்தம் தெரிவித்துள்ளதுடன் மன்னிப்பும் கோரியுள்ளார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வெள்ளையினத் தலைவர் ஒருவர் இவ்வாறு வருத்தம் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். வின்பேர்க்கின் மத்திய நகரில் நேற்று முன்தினமிரவு பொதுக் கூட்டமொன்றில் பேசிய அதிபர் டீ. கிளார்க் மேலும் கூறுகையில், தனித் தேசிய இன நாடுகளுக்கான கோரிக்கையில் வெற்றி காண்பது முடியாது என்பது தெரிந்திருந்தும் ஆளுங்கட்சி நீண்ட காலமாக இப் போக்கை கடைப்பிடித்து வந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இதற்காக வருத்தமும் தெரிவித்த டீ. கிளார்க் 1989-ல் பதவியேற்ற போது சட்ட பூர்வமான இன ஒதுக்கலுக்காக மன்னிப்புக்கோர மறுத்திருந்தது தெரிந்ததே. ஆர்ச்பிஷப் டெஸ்மன் டூட்டு உட்பட வெள்ளையரல்லாத பலரும் தென்னாபிரிக்க அதிபர் இத்தகைய மன்னிப்பைக் கோரவேண்டும் என்று வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

## அரசுகளுக்கிடையிலான வங்கி உருவாக்க பொதுநல அமைப்பு தலைவர்கள் இணக்கம்

(உஸ்பெக்)

ரூபிள் செலாவணி மண்டலத்தில் பணச் சுற்றைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத் துறையில் தமது கொள்கைகளை ஒருங்கிணைக்கவும், அரசுகளுக்கிடையே வங்கி ஒன்றை உருவாக்கவும், உஸ்பெக்கில் நடைபெற்ற ஒருநாள் உச்சி மாநாட்டில் முன்னாள் சோவியத் யூனியனின் சுதந்திரப் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

அங்கு மத்திய ஆசியக் குடியரசில் அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்டப் போரிடும் குழுக்களிடையே சமாதானத்தை நிலைநாட்டவும் ஒப்புக்கொண்டனர்.

முன்னாள் சோவியத் யூனியனுடன் அமெரிக்கா இராணுவ முனையில் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அனைத்து சுதந்திர பொதுநல அமைப்பு நாடுகளும் கட்டுப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

---

## டெரி அன்டர்சன் பதவி துறப்பு

(நியூயோர்க்)

ஏ. பி செய்தி நிறுவனத்தில் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கான நிருபராக பணியாற்றி வந்த டெரி அன்டர்சன் அண்மையில் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அமெரிக்கப் பத்திரிகையாளரான டெரி அன்டர்சன் லெபனானில் முஸ்லிம் தீவிரவாதிகளினால் ஏழு ஆண்டு காலமாகப் பணயக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த பின்னர் கடந்த டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டவர் என்பது தெரிந்ததே.

## ஆந்திர முதலமைச்சராக விஜயபாஸ்கர ரெட்டி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச முதல்வராக விஜயபாஸ்கர ரெட்டி நேற்று முன்தினம் பதவி ஏற்றுக் கொண்டார். மாநில காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராக ஏகமனதாக திரு விஜய பாஸ்கர ரெட்டி தெரிவு செய்யப்பட்டதையடுத்து அமைச்சரவை அமைக்கும்படியும் முதல்வர் பொறுப்பை ஏற்கும்படியும் மாநில ஆளுநர் அவருக்கு அழைப்பு விடுத்தார்.

மாநிலத்தின் பதின்மூன்றாவது முதல்வராகப் பொறுப்பேற்க விருக்கும் திரு விஜயபாஸ்கர ரெட்டி பத்தாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் மாநில அரசியலுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பேச்சுக்கான நிபந்தனை; இஸ்ரவேல் தளர்வு

(டெல்அவிவ்)

மேற்காசியசமாதானப் பேச்சுக்களில் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்பவர்களும் பங்கெடுத்துக் கொள்வதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜெருசலேமுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட எகிப்திய வெளியுறவு அமைச்சர் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ராபினை சந்தித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

எனினும் பாலத்தீனிய தேசிய சபையில் அங்கம் வகிப்பவர்களோ அல்லது கிழக்கு ஜெருசலேம் பகுதியை சேர்ந்தவர்களோ பாலஸ்தீனிய தூதுக்குழுவில் இடம்பெறக் கூடாது என்று இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

## பீகாரில் கலவரம் 81 பேர் பொலிசாரால் கைது

பீகார் மாநிலத்தில் மேலும் இருபத்தேழுபேர் வன்செயல் சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை எண்பத்தொன்றாக உயர்ந்துள்ளது.

மாநில பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்; பொலிசாரும், துணை இராணுவப் பிரிவினரும் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதாகவும், தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பிரச்சினைகளை தீர்க்க ஜனநாய வழியே சிறந்ததாம்

(கொழும்பு)

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனநாயக வழியைத் தவிர வேறு சிறந்த வழியேதும் இல்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

கொழும்பு சரசவிபாய எல்பிள்ஸ்ரன் மண்டபத்தில் சரசவிபாயாவின் நான்காவது ஆண்டு வருடாந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. பிரேமதாசா மேலும்கூறுகையில்; பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் ஜனநாயக வழிகளில் தீர்த்துக் கொள்வதைத் தவிர வேறு சிறந்த வழியேதும் இல்லை. தேர்தல்கள் மூலம் மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள நாகரிகமான வழிகள் இருக்கும்போது ஏன் நாம் ஆயுதங்களை நாடவேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். இந்த வகையிலேயே விடுதலைப் புலிகளோடு முன்பு பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

## லயன்ஸ் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து சுன்னாகம் பகுதியில் உள்ள பாடசாலைகள், கோயில்களில் தங்கியுள்ள மக்களுக்கு தேவையான உடுதுணிகளை சுன்னாகம்லயன்ஸ் கழகத்தினர் வழங்கி வருகின்றனர்.

லயன்ஸ் கழகத்தினர் சுன்னாகம் ஐயனார் கோயில், மயிலணி மகாவித்தியாலயம், சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் ஆகிய இடங்களுக்குச்சென்று உடுதுணிகளை வழங்கினர். (42)

## போட்டிகள் ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகள்மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட இருந்த பாடசாலை மாணவர்களிடையேயான பேச்சு, பாட்டுப் போட்டிகள் ஒத்திவைக்சப்பட்டுள்ளன. சகல பாடசாலை அதிபர்களுக்கும், கொத்தணி அதிபர்களுக்கும், மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு இது தொடர்பாக அறிவித்தல் விடுத்துள்ளது.

## சம்பளம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான சம்பளப்பணம் அண்மையில் கோண்டாவில் சாலையில் வைத்து வழங்கப்பட்டுள்

## கேரளத்தில் மண்சரிவு 48 பேர் பலியாகினர்

(கேரளம்)

கேரளத்தில் பெய்த பலத்த மழையை அடுத்து திருவனந்தபுரம் மற்றும்கொல்லம்மாவட்டத்தில் நிலச்சரிவு மற்றும் வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் 48 பேர் இறந்திருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது.

திருவனந்தபுரம் மாவட்டத்தில் சுமார் 3500 வீடுகள் இடிந்து வீழ்ந்து போய்விட்டன உதவிப் பணிகளுக்கு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது மேற்படி மாவட்டத்தில் 18 பேரும், பாத்தளம் திட்டத்தில் 19 பேரும், கொல்லத்தில் 18 பேரும் தணக்காடு கோழிக்கோடு மற்றும் வேறு சில பகுதிகளில் தலா ஒருவர் வீதமும் இறந்துள்ளனர்.

## திருட்டு

இணுவில் பிரதான வீதியிலுள்ள புடவைக்கடையொன்று இரவு வேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான சாறிகள், துணிவகைகள் திருடப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு பஜார் வீதியில் புடவைக்கடை வைத்திருந்த ஒருவர் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து இணுவிலில் திறந்திருந்த புதிய புடவைக் கடையிலேயே இத்திருட்டு நடைபெற்றது. (42)

## சித்தாந்த பண்டிதர் பரீட்சைப் பெறுபேறு

சைவ பரிபாலன சபையின் பரீட்சைப் பகுதியினரால்

## மேலை நாடுகளில் இந்துப் பண்பாடு

(யாழ்ப்பாணம்)

சிவகுருநாத குருபீடத்தின் வேதாந்த மடத்தில் பூரணை தினச் சொற்பொழிவுகளின் வரிசையில் இன்று ''மேலை நாடுகளில் இந்துப் பண்பாடு'' என்னும்தலையங்கத்தில் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் உரையாற்றவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவரான கலாநிதி கோபாலகிருஷ்ணன் அவர்களின் உரை இன்று பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு இல. 18 குமாரசுவாமி வீதியில் இருக்கும் வேதாந்த மடத்தில் இடம்பெறும்.

## இடம் பெயர்ந்தோருக்கு உதவி

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும், இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மற்றும் இராமநாதன் கல்லூரி, கெல்ற் மாணவர்கள் இணைந்து பொது மக்களிடமிருந்து சேகரித்த அரிசி, மா, தேங்காய், சவர்க்காரம், உடுப்பு வகைகள் என்பன

## இடம் பெயர்ந்த மாணவருக்கு சீருடை

(குருநகர்)

யாழ்-மறைவட்ட மனித முன்னேற்றநடுநிலையம்இடம் பெயர்ந்துள்ள மாணவ மாணவிகளுக்கு சீருடைகள், அப்பியாசப் புத்தகங்களை வழங்கியுள்ளது.

இதன்படி மல்வம், புதுமடம், உடுவில் பகுதிகளில் 247 மாணவ மாணவிகளும்- சங்கானையில் 255, நவாலியில் 210, உரும்பராயில் 50 மாணவ மாணவிகள் இவ்வுதவிகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் நிலையத்தால், இடம் பெயர்ந்துள்ள ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவு பால்மா என்பனவும் வழங்கப்பட்டு வருகிறது (21)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்குப் பகுதியில் க. காங்கேசன் என்பவர் வீட்டில் உள்பகுதியில் விடப்பட்ட சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அடிக்கடி திருட்டுகள் நடைபெறுவதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகத் தமிழீழ காவல் துறையினர் தெரிவித்துள்ளார்கள். (42), (22)

## கப்பல் திருவிழா

(வடமராட்சி கிழக்கு)

சரித்திர பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் கப்பல் திருவிழா நாளை இரவு நடைபெறவுள்ளது. (36)

# மாகாணசபை ஆஸ்பத்திரிகளை தனியாரிடம் விட அரசு முயற்சி

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழுள்ள ஆஸ்பத்திரிகளின் நிர்வாகத்தை சிறிலங்கா அரசு தனியாரிடம் ஒப்படைக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா அரசிற்கு தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பாரிய நிதி நெருக்கடிகளைச் சமாளிக்கும் நோக்குடனேயே அரசு இதனை தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிகளில் இன்று உரியமுறையில் நோயாளருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. சரியான முறையில் நோயாளர் பராமரிக்கப்படுவதில்லை. அத்தியாவசிய மருந்துகள் அங்கு கிடையாது. அடிப்படை சுகாதார வசதிகள் கூட அங்கு காணப்படுவதில்லை.

இவற்றைச் சீர்செய்வதற்கு தேவையான அளவு நிதியை ஒதுக்க முடியாத நிலையில் சிறிலங்கா அரசு இருந்து வருகிறது. எனவேதான் இவ் ஆஸ்பத்திரிகளின் நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்க அது எண்ணியுள்ளது என தெரியவருகிறது.

## தபால் நிலையங்களில் முத்திரைக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள தபால் நிலையங்களில் தபால் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட தபால் முத்திரைகள் அனைத்து தபால் நிலையங்களுக்கும் பகிர்ந்து விநியோகிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறுவிநியோகிக்கப்பட்ட முத்திரைகள் தற்பொழுது தீர்ந்துவிட்டதாகத் தெரியவருகிறது எனினும் முத்திரைகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதற்கு இதுவரை முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தகவலில்லை (க)

வெளிநாட்டு

## வேலைவாய்ப்புப் பணியகம் தகவல்கள் வழங்கும்

(கொழும்பு)

வெளிநாட்டில் முகவர்கள் மூலம் தொழிற்பெற்றுச் செல்பவர்கள் அந்த முகவர் நிலையங்கள் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா? செல்லும் நாட்டில் வழங்கப்பட இருக்கும் வேலை உண்மையானதா என்பது போன்ற விபரங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் இருந்து அறிந்து கொள்ளலாம்.

இதேவேளை, மோசடியில் ஈடுபட்ட 14 முகவர் நிலையங்கள் மீது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

# அன்று இன்று சுயநலம்பேணியோர் முதலைக்கண்ணீர்...?

### வி. எஸ். ராஜா

(தெரணியகலை)

இந்நாட்டு சிறுபான்மை மக்களின் ஜீவாதார உரிமைகளை பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்ட அந்தக்காலத்தில் பறித்தெடுத்தவர்களுக்கு உறுதுணையாக நின்று அற்ப சொற்ப இலாபங்களைப் பெற்று சுயநலத்தினைக் கட்டிக் காத்தவர்கள் இன்று தமிழ் மக்களின் நலனை பேணுவது தொடர்பாக முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர் இப்படி ஒப்பாரி வைப்பது வேடிக்கையாகவே உள்ளது.

இவ்வாறு தெஹியோவிற்ற பகுதி தியகல தோட்டத்தில் நடைபெற்ற இலங்கை விவசாய கிராமிய தொழிலாளர்

வி. எஸ். ராஜா தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் எந்தவித சொந்த இலாபமும் கருதாமல் நேர்மையாக போராடியவர்கள் சமசமாஜக் கட்சியினரே என்றும் கூறினார்.

மாரிகால தேவைக்கென உணவு

## களஞ்சியப்படுத்த எடுத்த முயற்சிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான மாரிகால உணவுத் தேவைக்கென அத்தியாவசிய உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தும் முயற்சி பாதிக்கப்பட்டுள்ளது.

இழுவைப் படகுகள் மூலம் பொருள்களை இறக்குவது மிகுந்த சிரமமான செயலாகும். இதனால் கப்பலில் உள்ள பொருள்களை கையாள்வதில் நீண்டகாலதாமதம் ஏற்படும்.

இவ்வாறான

அதிகார

ளால் போரின்போது அழிக்கப்பட்டன. ஒரு தொகுதி கைப்பற்றப்பட்டன.

இதில் விமானப்படைக்குச் சொந்தமான வை-8விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமையும், கடற்படையின் நீருந்துவிசைப் படகைப் புலிகள் கைப்பற்றியமையும் முக்கியமானவையாகும்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில், வன்னான்குளம், மணலாற்றுப் பகுதியில் கொங்வேவ, கட்டைக்காடு மினிமுகாம் என்பன புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டமையும், இராணுவத்தின் முக்கிய தந்திரோபாயமான இராணுவ வேலி பூநகரியிலும், கட்டைக்காட்டுப் பகுதியிலும் தாக்கி அழிக்கப்பட்டமையும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவுகளாகும்.

வடபகுதி

காணமுடியவில்லை. முன்னர் போரை நடாத்துவதற்கான முடிவான பொறுப்பு கூட்டுப் படைத் தலைமையகத்திடமே இருந்தது. கூட்டுப்படை தலைமையக தளபதியான ஹமில்டன் வனசிங்காவிடம்மேலான அதிகாரம் இருந்தமை முப்படைகளினதும்தளபதிகளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. போர்முனையில் அப்போது பின்னடைவுகள் இடம்பெற்றதாயும், போரில்வெற்றிகளைப் பெறவேண்டுமானால் மேலான அதிகாரம் ஹமில்டன் வனசிங்காவிடம் இருந்து மீளப்பெறப்படவேண்டும் அதிகாரம் முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அரச சார்பு 'ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

தொடர்ந்து அரசு கூட்டுப் படைத் தலைமையகத்திடம் இருந்து பொறுப்புக்களை மீளப்பெற்றது. முப்படைஅதி

அமைப்பினால் நடாத்தப்பட்ட இருந்த பாடசாலை மாணவர்களிடையேயான பேச்சு, பாட்டுப் போட்டிகள் ஒத்தி வைக்சப்பட்டுள்ளன. சகல பாடசாலை அதிபர்களுக்கும், கொத்தணி அதிபர்களுக்கும், மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு இது தொடர்பாக அறிவித்தல் விடுத்துள்ளது.

## சம்பளம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான சம்பளப்பணம் அண்மையில் கோண்டாவில் சாலையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

சபையைச் சேர்ந்த உயரதிகாரிகள் அண்மையில் கொழும்பு சென்று இந்தச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டுவந்து வழங்கியுள்ளனர். (42)

## மாணவர் அனுமதி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக கைதடி சித்த மருத்துவம் 1991-92 கல்வியாண்டிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறுமென பரீட்சைக் கிளை அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக் கழக சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை கல்வித்தகைமைச் சான்றிதழ் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், நற்சான்றிதழ் பத்திரங்களுடன் சமுகந் தருமாறு யாழ் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்(05)

## பொலிஸ் சூடு ஒருவர் பலி

(சென்னை)

செங்கை எம்.ஜி ஆர் மாவட்டத்திலிருக்கும் மதனபுரம் என்னும் பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிசார்மீது ஒரு கும்பல் தாக்கியதாகவும் அவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சம்பவத்தை தொடர்ந்து காவல்துறை உயர் அதிகாரிகள் உடனடியாகஸ்தலத்திற்கு விரைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருட்டு

இணுவில் பிரதான வீதியிலுள்ள புடவைக்கடையொன்று இரவுவேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான சாறிகள், துணிவகைகள் திருடப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு பஜார் வீதியில் புடவைக்கடை வைத்திருந்த ஒருவர் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து இணுவிலில் திறந்திருந்த புதிய புடவைக் கடையிலேயே இத்திருட்டு நடைபெற்றது. (42)

## சித்தாந்த பண்டிதர் பரீட்சைப் பெறுபேறு

சைவ பரிபாலன சபையின் பரீட்சைப் பகுதியினரால் நடாத்தப்பட்ட சித்தாந்த தேர்வுகளில் திருமதி கலாநிதி பிரகதீஸ்வரன், திருமதி சுகிர்தகுமாரி சிவாகரன் ஆகியோர் சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சையின் 2-ம் பிரிவிலும், செல்விகள் காந்திமதி சங்கரலிங்கம், பரமேஸ்வரி சின்னத்துரை, உமா தம்பிராசா ஆகியோர் சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சையிலும், திரு. குமாரசாமி துரைராசா சித்தாந்த பண்டிதர் பரீட்சையிலும் சித்தியெய்தி உள்ளனர்.

## பதுறுதீன் விலகினார்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழு உறுப்பினர் ஜனாப். ஏ. ஸி. ஏ. பதுறுதீன், கட்சியின் சகல குழுக்களில் இருந்தும் அங்கத்துவப் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்தார்.

இது தொடர்பாகக் கட்சியின் செயலாளருக்கு அவர் எழுதிய கடிதத்தில் கடந்த ஒரு வருடமாகக் கட்சியின் போக்கிலும், தலைமையத்துவத்திலும் தனக்கு ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே தாம் பதவி விலகுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. பதுறுதீன் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராவார்.

## மன்னார்

கடந்த மாதம் 18ஆம் திகதி தமிழகத்திலிருந்து திருக்கோணமலைக்கு வந்துசேர்ந்தவர்கள் பல நாட்களாக அங்குள்ள முகாம் ஒன்றில் தங்க வைக்சப்பட்டிருந்தனர்,

கடந்த 7 ஆம் திகதி மன்னார் பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்கள் புத்தளம் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டன. (தி)

நாகரிகத்துறைத் தலைவரான கலாநிதி கோபாலகிருஷ்ணன் அவர்களின் உரை இன்று பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு இல. 18 குமாரசுவாமி வீதியில் இருக்கும் வேதாந்த மடத்தில் இடம்பெறும்.

## இடம் பெயர்ந்தோருக்கு உதவி

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும், இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மற்றும் இராமநாதன் கல்லூரி, கெல்ற் மாணவர்கள் இணைந்து பொது மக்களிடமிருந்து சேகரித்த அரிசி, மா, தேங்காய், சவர்க்காரம், உடுப்பு வகைகள் என்பன அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, நவாலி இந்துக் கல்லூரி, அதிகார் முகாம், ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவில் அகதிகள் முகாம் என்பவற்றில் தங்கியுள்ள சுமார் நானூற்றி இருபத்து இரண்டு குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## விமானப்படை நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் கரையோரப்பகுதிகளை சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி ஒன்று நேற்று காலையும் மாலையும் நோட்டமிட்டுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதற்கிடையே அவ்ரோ விமானமொன்றும் பல தடவை பலாலி முகாம் சென்று திரும்பியதைக் காணக் கூடியதாக இருந்தது. (பா)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வரும் திருநெல்வேலி நல்லூர் வட்டாரங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி ஏற்றும் பணி நாளை திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்றுநாட்களுக்கு நடைபெறவுள்ளது.

அப்பகுதி சன சமூக நிலையங்களில் வைத்து ஊசி ஏற்றப்படும் என நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை நல்லூர் பிரதேச சபைஎல்லைக்குள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்துஅழிக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (42)

## இன்று முதலைக் கண்ணீர்...!

(தெரணியகலை)

இந்நாட்டு சிறுபான்மை மக்களின் ஜீவாதார உரிமைகளை பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்ட அந்தக்காலத்தில் பறித்தெடுத்தவர்களுக்கு உறுதுணையாக நின்று அற்ப சொற்ப இலாபங்களைப் பெற்று சுயநலத்தினைக் கட்டிக் காத்தவர்கள் இன்று தமிழ் மக்களின் நலனை பேணுவது தொடர்பாக முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர் இப்படி ஒப்பாரி வைப்பது வேடிக்கையாகவே உள்ளது.

இவ்வாறு தெஹியோவிற்ற பகுதி தியகல தோட்டத்தில் நடைபெற்ற இலங்கை விவசாய கிராமிய தொழிலாளர் காங்கிரஸின் அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்து பேசிய அதன் பொதுச் செயலாளர் வி. எஸ். ராஜா தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் எந்தவித சொந்த இலாபமும் கருதாமல் நேர்மையாக போராடியவர்கள் சமசமாஜக் கட்சியினரே என்றும் கூறினார்.

வி. எஸ். ராஜா

## கண்டுபிடிப்பாளர் சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் புதிய கண்டுபிடிப்பாளர் சங்கம் என்ற பெயரில் புதிய கழகமொன்று அடுத்த மாதம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நாடு முழுவதும் இருக்கும் புதிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இக்கழகம் ஆரம்பிக்கப்படும் என்று வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கூறியுள்ளார்.

## பொலிஸ் வாகனம் மோதி இளைஞர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையக் காவலரணுக்கு அருகே கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்ற விபத்தொன்றில் நடராஜன் வெள்ளையன் (வயது 30) என்பவர் கொல்லப்பட்டார்.

பொலிஸின் பவுஸர் வண்டி ஒன்று நெல்லுமூட்டையுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வெள்ளையன் மீது மோதியபோதே இந்த மரணம் சம்பவித்தது. வெள்ளையன் மட்டு. எல்லை வீதியைச் சேர்ந்தவராவார்.

## மறியல்

கொண்ட பத்திரிகையாளர் எதற்காக இவ்வாறு நடந்து கொள்கிறீர் என பொலிஸ் அதிகாரியிடம் கேட்டபோது பாதையோரத்தில் நின்று கொண்டு, உங்கள் போராட்டத்தை செய்யுங்கள் என்று அதட்டினர். அப்பொழுது அங்கே சூழ்ந்து கொண்ட பொதுமக்களைக் கண்டு அந்த பொலிஸ் அதிகாரி அங்கிருந்து ஓடி மறைந்துவிட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

மாரிகால தேவைக்கென உணவு

## களஞ்சியப்படுத்த எடுத்த முயற்சிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான மாரிகால உணவுத் தேவைக்கென அத்தியாவசிய உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தும் முயற்சி பாதிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் வாரங்களில் பருவகால மாற்றங்களால் பலத்த காற்றும் மழையும் தொடர்சியாக இருக்கும். இதனால் பருத்தித்துறை துறைமுக கடற்பரப்பில் பலத்த கடல் கொந்தளிப்பு ஏற்படுவது வழக்கம். இதனால் மேற்படி துறைமுகத்தில் இக்காலப்பகுதியில் கப்பல்களில் இருந்து ''பாஜ்'' எனப்படும் இழுவைப் படகுகள் மூலம் பொருள்களை இறக்குவது மிகுந்த சிரமமான செயலாகும். இதனால் கப்பலில் உள்ள பொருள்களை கையாள்வதில் நீண்டகாலதாமதம் ஏற்படும்.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மேற்படி காலப்பகுதிக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் களஞ்சியப் படுத்தி வைக்க யாழ் செயலகம் சில நடவடிக்கைகளை எடுத்தது இதன் ஒரு கட்டமாக ''குமாரி'' என்ற கப்பலைத் திருக்கோணமலைக்கு அனுப்பி மாவை எடுத்து வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள யாழ். அரச அதிபர் முயற்சி எடுத்தார். ஆனால் இக்கப்பல் மன்னார் மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருள்களின் தொகுதி ஒன்றையும் எடுத்து வந்துள்ளது.

இப்பொருள்களைமன்னாரில் இறக்கிய பின்னரே இக்கப்பல் திருமலை சென்று மாவை எடுத்து வரும் என்று கூறப்படுகிறது. இதனால் ஏற்படும் காலதாமதம் காரணமாக யாழ். செயலகத்தின் களஞ்சியப்படுத்தும் முன்னேற்பாட்டு நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. (க)

## விமானம்மீது தாக்குதல்

(ரொரன்ரோ)

சோமாலியாவில் பட்டினியால் செத்து மடியும் மக்களுக்கென நிவாரண உதவிகளுடன் சென்ற கனேடிய விமானமொன்று ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியது.

கனேடிய இராணுவ விமானத்தின் மீது சோமாலிய மலை ஜாதி எதிர்ப்பாளர்களே இத்தாக்குதலை நடாத்தினர்.

## ராணுவ

ப்பு கலைக்கப்பட்டது பின்னர் 1990 இல் போர் ஆரம்பிக்கப்பட்டபின்னர் ஆரம்பித்த இந்த அமைப்பு 1992 ஏப்ரல் வரை பொறுப்பாக இருந்தது.

மீண்டும்புதிதாகப் பொறுப்புக்களைஏற்கும் கூட்டுப்படை தலைமையகம் வடக்கு-கிழக்குப்இராணுவ நடவடிக்கைகளைத்திட்டமிடவுள்ளது. இத்தலைமை அமைப்பின் கீழ் சிறப்பான இராணுவப் பிரிவு ஒன்றும் விசேடமாக அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

முப்படைகள் மீதும் கூட்டுப்படை இராணுவ தலைமைப் பிரிவு முழு அதிகாரத்தையும் கொண்டு இயங்கும் எனவும் எல்லாவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் அமைக்கப்படவுள்ள சிறப்பு இராணுவப்பிரிவு திட்டமிட்டு செயற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முடிவான பொறுப்பு கூட்டுப்படைத் தலைமையகத்திடமே இருந்தது. கூட்டுப்படை தலைமையக தளபதியான ஹமில்டன் வனசிங்காவிடம்மேலான அதிகாரம் இருந்தமை முப்படைகளினதும்தளபதிகளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. போர்முனையில் அப்போது பின்னடைவுகள் இடம்பெற்றதாயும்,போரில்வெற்றிகளைப் பெறவேண்டுமானால் மேலான அதிகாரம் ஹமில்டன் வனசிங்காவிடம் இருந்து மீளப்பெறப்படவேண்டும் அதிகாரம் முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அரச சார்பு 'ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

தொடர்ந்து அரசு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து பொறுப்புக்களை மீளப்பெற்றது. முப்படைஅதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் முப்படை அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபின்னர் இராணுவத்தரப்புபோர்முனையில் பெரும் பின்னடைவுகளை எதிர்கொண்டது இதனால் பொறுப்பு திரும்பவும் கூட்டுப்படைத் தலைமையகத்திடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது

அதேசமயம் படையின் உயர் மட்டத் தலைவர்கள் இடையேயான ஒற்றுமையீனமும், போட்டியும் போர்முனையில் இன்னும் கூடுதலான பாதிப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை எனவும் ஐவன் தெரிவித்தார்

சமாதானத்தை நோக்கிச் செல்வதா? அல்லது தொடர்ந்து போரை நடாத்துவதா? என்பதனையிட்டு தெளிவற்ற நிலையிலேயே அரசு உள்ளது அதேசமயம் வெகுசனங்களின் நன்மையைவிட அரசியல் இலாபங்களைப்பெறும் நோக்கிலேயே அரசு செயற்பட்டு வருவதாக மேலும்அவர் தெரிவித்தார்

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**10-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6054

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

26-1735, 42-3964, 22-3611, 42-1494, 41-6933, 26-7525 41-9663, 41-5015

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

26-4727, 26-1724, 27-7627, 26-9992, 28-587, 40-7207, 28-0425, 42-5603, 26-0048, 42-1325, 26-9803, 41-0534 40-4103, 42-0728, 27-6887, 24-7107, 24-944, 22-6746 21-2089, 40-7299.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.